06 JAN 2022

## பொள்ளாச்சி வணிகவரி மாவட்ட துணை ஆணையர்(மாவ) அவர்களது செயல்முறைகள்

**பிறப்பிப்பவர் -திருமதி அ.ஜன்னத்துல் ஃபிர்தவுஸ் எம்.பி.ஏ.,**

**ந.க.எண்.3738/2021/அ1** **நாள் 04.01.2022**

பொருள் - பணியமைப்பு - வணிகவரித்துறை - கோவைக் கோட்டம் - பொள்ளாச்சி(வவ) மாவட்டம் - பதிவுரு எழுத்தர்கள் - இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்றது - பணிவரன்முறை -தகுதிகாண் பருவம் - ஆணைகள் பிறப்பித்தல்.

பார்வை - 1)இணை ஆணையர்(மாவ), கோவை அவர்களின் செ.மு. ந.க.எண்- 1589/2021/அ1, நாள் 15.09.2021.
2)துணை ஆணையர்(மாவ), பொள்ளாச்சி அவர்களின் செ.மு ஆணை எண் ந.க.585/2021/அ1 நாள் 16.09.2021.

-----

**ஆணை**

பார்வை 1-ல் காணும் இணை ஆணையர்(மாவ), கோவை அவர்களின் செயல்முறை ஆணைகளின்படி, பதிவுரு எழுத்தர் நிலையிலிருந்து, இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வினில், இவ்வணிகவரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2-ல் காணும் துணை ஆணையர்(மாவ) பொள்ளாச்சி அவர்களின் ஆணைகளின்படி, இளநிலை உதவியாளர்களாக பணி நியமனம் பெற்ற கீழ்க்கண்ட இளநிலை உதவியாளருக்கு பணிவரன்முறை செய்து தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள் 32(அ)(1) ன் கீழ் தனியாளர் இளநிலை உதவியாளர்களாக பணியில் சேர்ந்த நாள்முதல், தகுதிகாண் பருவம் தொடங்கப்பட்டதாக ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி திரு/திருமதி | பணியாற்றும் அலுவலகம் | பணியேற்ற நாள் |
|---|---|---|---|
| 1 | வெ.மகேஸ்<br>இளநிலை உதவியாளர் | துணை ஆணையர்(மாவ) அலுவலகம், பொள்ளாச்சி | 17.09.2021 பிற்பகல் |
| 2 | ஆ.சபரீசன்<br>இளநிலை உதவியாளர் | மாநிலவரி அலுவலர் அலுவலகம், பொள்ளாச்சி (மேற்கு) | 17.09.2021 பிற்பகல் |
| 3 | ப.பேபி ஷகீலா<br>இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர்(மாவ) அலுவலகம், உடுமலைப் பேட்டை(தெற்கு) | 27.09.2021 முற்பகல் |

மேற்காண் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக 3 (மூன்று) ஆண்டுகளுக்குள் 2 (இரண்டு) ஆண்டுகள் திருப்திகரமாக தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்ய வேண்டும்.

தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வினில் தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

மேற்படி ஆணை தொகுதி IV அடங்கிய 2013-14 மற்றும் 2014-15 ஆண்டு இளநிலை உதவியாளர் நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் சென்னை மற்றும் மதுரை கிளைகளில் நிலுவையாக உள்ள மற்றும் இதர நீதிமன்ற வழக்குகளின் இறுதி தீர்ப்புகளுக்குட்பட்டது.

துணை ஆணையர்(மாவ)
பொள்ளாச்சி

4.01.22

4/1/22

**பெறுநர்**

தனியாளர்கள்
(அலுவலகத் தலைவர்கள் மூலமாக)

**நகல்**

1. மாநில வரி அலுவலர், பொள்ளாச்சி(மேற்கு)
2. உதவி ஆணையர்(மாவ), உடுமலைப்பேட்டை(தெற்கு)
3. இணை ஆணையர்(வவ),கோவை அவர்களுக்கு

தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.